John Keells Group

# JK செய்திகள்

2021/22 நான்காவது பதிப்பு | அக்டோபர், நவம்பர், டிசம்பர் செய்தி


Pg 02


Pg 03


Pg 07


Pg 04

# பணிப்பாளர் சபைத் தலைவரின் செய்தி



**கிறிஷான் பாலேந்திரா**
குழுமத்தலைவர்

1 ஜனவரி, 2022

பிரியமான சக ஊழியர்களே,

குழுமத்தின் நிர்வாகக் குழுவின் சார்பில், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் புத்தாண்டு மகிழ்ச்சியாக, ஆரோக்கியமானதாக மற்றும் வளமாக அமைய வாழ்த்துகளை தெரிவிக்கிறேன்!

நாங்கள் புத்தாண்டை புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை மற்றும் மேக்ரோ சூழ்நிலை நாட்டிற்குத் தோற்றும் சவால்களை முழுமையாக அறிந்திருக்கும் வேளையில் 2021 ஆம் ஆண்டில் குழு முழுவதும் எங்கள் அணிகள் மேற்கோண்ட முயற்சிகளை நான் அங்கீகரிக்க விரும்புகிறேன். 2021 ஆம் ஆண்டில் நாங்கள் கண்ட இடையூறுகள் மற்றும் முடக்கங்களை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றாலும், நீங்கள் ஒவ்வொருவரும் அதற்கு பதிலளித்த விதம் குறித்து நான் பெருமைப்படுகிறேன் - அது ஜோன் கீல்ஸ்ஸின் சிறப்பம்சங்களான மீட்டெழுச்சி, பேரார்வம் மற்றும் திடமான நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. நாங்கள் எங்கள் மதிப்புகளுக்கு ஏற்ப வாழ்ந்த விதம், ஒருவரையொருவர், எங்கள் சமூகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களைக் கவனித்து, எங்கள் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்த விதம் மற்றும் வணிகச் சிறப்பை அடைய பாடுபட்ட விதம் ஜேகேஎச் (JKH) இன் உயரிய உணர்வைக் காட்டுகிறது

கடந்த ஆண்டிலிருந்து எமது சில சிறப்பம்சங்களை மீண்டும் நினைவுகூற இந்த வாய்ப்பை பயன்படுத்த விரும்புகிறேன், இது தொடர்ச்சியான முன்னோடியில்லாத சூழ்நிலைகள் இருந்தபோதிலும், நாங்கள் அழுத்த அலகுகளை எப்படி உயர்த்தினோம் என்பதை நிரூபித்தன. சினமன் லை.்.ப்பின் குடியிருப்பு மற்றும் வணிக கோபுரங்களை நாங்கள் நிறைவு செய்தோம் - மேலும் அடுக்குமாடி குடியிருப்புகளை ஒப்படைக்க ஆரம்பித்தோம். அதே நேரத்தில் “ஒபிஸஸ் அட் சினமன் லை.்.ப்பில் (“Offices at Cinnamon Life“) அனைத்து வாடகை இடங்களுக்கும் ஒரு முக்கிய குத்தகைக்காரரை சுவீகரித்தது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். கொழும்பு துறைமுகத்தில் மேற்கு கொள்கலன் முனையத்தை அமைப்பதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இந்தியாவின் அதானி குழுமத்துடன் நாங்கள் ஒரு முக்கிய உடன்படிக்கை செய்துள்ளோம், இது குழுமத்தின் இரண்டாவது துறைமுக முனையமாக இருக்கும். கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் இலங்கையில் இதுவரை இல்லாத மிகப்பெரிய முதலீடுகளில் ஒன்றாக இருக்கும். குழுமத்திற்கான மற்றொரு முக்கிய முதலீடு, டிசம்பர் மாதம் எங்கள் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அமெரிக்க டொலர் 80 மில்லியன் வரையிலான பங்குகளை தனிப்பட்ட முறையில் வைப்பது ஆகும். இந்த நிலையற்ற காலகட்டத்தில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு மிகவும் மதிப்புமிக்க உலகளாவிய நிறுவனங்களில் ஒன்றை ஈர்ப்பதில் எங்களின் திறன், ஜோன் கீல்ஸின் பலத்தை அங்கீகரிப்பதாக நான் பணிவுடன் நம்புகிறேன். 2021 ஆம் ஆண்டில் முடிவடையும் மற்றொரு முக்கிய பரிவர்த்தனை – சினமன் லை.்.ப் இன் (Cinnamon Life) அமெரிக்க டொலர் 395 மில்லியன் கால கடன் வசதியை மறுநிதியளித்து நாங்கள் முடித்தோம். இவை அனைத்தும் குழுமத்தின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒரு சில மட்டுமே ஆகும், மேலும் எங்கள் அனைத்து வணிகங்களும் செயல்பாடுகள் சீராக இயங்குவதை உறுதிசெய்து, வருடத்தில் எங்களது வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. இந்தச் சாதனைகளில் சிலவற்றை நாம் திரும்பிப் பார்க்கும்போது, நாம் கூட்டாகச் சாதித்தவற்றை குறித்து உண்மையிலேயே நன்றியுடையவர்களாகவும் பெருமையாகவும் இருக்கலாம்.

2022 ஆம் ஆண்டில், புதிய சந்தை மற்றும் மதிப்பு வலையமைப்பை உருவாக்கும் சீர்குலைக்கும் கண்டுபிடிப்புகள், தரவு சார்ந்த முடிவெடுத்தல், DE&I (பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம்) மற்றும் ESG (சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் நிர்வாகம்) ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்துவோம். ஒக்டேவ் ஆனது சில்லறை வணிகம், நிதிச் சேவைகள் மற்றும் நுகர்வோர் உணவுகளுடன் குழும அளவிலான முன்முயற்சியான ஒரே வாடிக்கையாளர் பார்வையில் பெரும் முன்னேற்றத்துடன் வேகத்தை அதிகரித்து வருகிறது, எங்கள் முதலீட்டாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்கள் ESG மீது அதிக முக்கியத்துவம் அளித்து, எங்கள் வன் ஜேகேஎச் (ONE JKH) முன்முயற்சியின் மூலம் நாங்கள் செய்யும் பணிகள், ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையின் பிரஜா சக்தி போன்ற எங்கள் முயற்சிகள் மற்றும் நிலைத்தன்மைக்கான எங்கள் பணி ஆகியவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அது வணிகத்திற்கு நல்லது, அது மாத்திரமல்ல, நமது மக்கள், நமது சமூகங்கள் மற்றும் நமது பூமிக்கு செய்யக் கூடிய சரியான விடயமாகும்.

ஜோன் கீல்ஸ் குழுவின் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் பாராட்டுவதற்கும், புத்தாண்டில் உங்கள் தொடர்ந்த ஆதரவை எதிர்நோக்குவதற்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். தொற்றுநோய் முழுமையாக நம்மை விட்டு அகலவில்லை மற்றும் பாரிய சூழல் சவால்களை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் அறிந்திருந்தாலும், எங்கள் எல்லா வணிகங்களுக்கும் ஜேகேஎச் (JKH) இன் எடுத்துக்காட்டான குழுப்பணி, ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றால் தாங்கப்படும் என்றும் எங்கள் நீண்டகால நோக்கங்களை அடைய நாங்கள் பாடுபடுவதை உறுதி செய்யும் என்று நான் நம்புகிறேன். வெற்றிகரமான 2022 ஐ உறுதிப்படுத்த உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்!
நன்றி மற்றும் பாதுகாப்பாக இருங்கள்!

தங்கள் உண்மையுள்ள,

கிரு'ான்

# விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

**ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையத்தின் ஆண்டறிக்கை விருதுகள் 2021 இல் ஒட்டுமொத்த அளவில் தங்கத்தை வென்றுள்ளது!**











டிசம்பர் 2021 அன்று SAP இன் புத்தம் புதிய King of Cluster நிகழ்ச்சித்திட்டத்தில் ஜோன் கீல்ஸ் ஐடி ஒரு ”GAME CHANGER” ஆக அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம், ஜோன் கீல்ஸ் ஐடியை வர்த்தகநாம பிரசன்னம், முக்கிய வாடிக்கையாளர் வெற்றி வரலாறுகள் மற்றும் பலதரப்பட்ட தொழிற்துறை அனுபவம் ஆகியவற்றில் ஒரு சிறந்த பங்காளராக SAP அங்கீகரித்துள்ளது. Microsoft Inspire 2021 நிகழ்வில் Azure Tech Intensity Partner of the year, SAP on Azure Partner of the year, Azure Migrate Partner of the year ஆகிய 3 முக்கிய விருது வழங்கல் பிரிவுகளில் ஜோன் கீல்ஸ் ஐடியை வெற்றியாளராக மைக்ரேசொப்ட் அங்கீகரித்துள்ளது. மேலும், UiPath Automation Excellence Awards விருதுகள் நிகழ்வில் ஜோன் கீல்ஸ் ஐடி ஆனது கீல்ஸுக்கு டிஜிட்டல் முயற்சிகளில் உதவிய பங்காளராகவும் அங்கீகரிக்கப்பட்டது.




30 நவம்பர் 2021 அன்று LMD சஞ்சிகையால் தேசத்தின் மிகவும் பிரபலமான பல்பொருள் அங்காடியாகவும் (சுப்பர் மார்க்கெட்), இணைய (உணவு மற்றும் பலசரக்கு) பிரிவில் தேசத்தின் மிகவும் பிரபலமான சேவை வழங்குநராகவும் கீல்ஸ் அங்கீகரிக்கப்பட்டது.

விக்டோரியா கோல்.்.ப் அன்ட் கன்ட்ரி ரிசோர்ட் 28 அக்டோபர் 2021 அன்று 8 ஆவது வருடாந்த உலக கோல்.்.ப் விருதுகள் நிகழ்வில் இலங்கையின் சிறந்த கோல்.்.ப் மைதானமாக விருதைப் பெற்றுள்ளது. உலக கோல்.்.ப் விருதுகள் கோல்.்.ப் சுற்றுலாத்துறை, உலகத் தரம் வாய்ந்த மைதானங்கள் மற்றும் கோல்.்.ப் விளையாட்டு இடங்கள் ஆகியவற்றில் தலைசிறந்தவற்றைப் போற்றிக் கொண்டாடி, வெகுமதியளிப்பதுடன், இத்தொழிற்துறையில் தர ஒப்பீடாகத் திகழ்கின்ற முன்னோடிகளுக்கு இனங்காணல் அங்கீகாரமளிக்கின்றது. கோல்.்.ப் துறையின் வல்லுநர்கள் மற்றும் கோல்.்.ப் சுற்றுலாத்துறையைச் சார்ந்தவர்கள் மூலம் இதற்கான வாக்குகள் அளிக்கப்படுகின்றன.






யூனியன் அஷூரன்ஸ் பிஎல்சி, 9 ஆவது ஆண்டாக Great Place to Work ஆகவும், 2021 ஆம் ஆண்டிற்கான ஆசியாவில் Best Place to Work ஆகவும் அங்கீகரிக்கப்பட்டது. 2021 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற GPTW விருது வழங்கும் விழாவில் யூனியன் அ'ரன்ஸ் பெரிய நிறுவனப் பிரிவில் வெண்கல விருதையும் வென்றுள்ளது. யூனியன் அஷூரன்ஸ் நிறுவனமானது இந்த பிரிவில் முதல் மூன்று இடங்களில் இடம்பெற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கையின் ஒரே காப்புறுதி நிறுவனமாகத் திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தலைமை அலுவலகத்தில் முதல் பணி நாள்

2022 ஆம் ஆண்டின் அலுவலகப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் வகையில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைமை அலுவலகத்தில் பாரம்பரிய மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பணிப்பாளர் சபைத் தலைவரின் உரை குழுமத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.













# வர்த்தக சமூக நலன்புரிச் செய்திகள்

வர்த்தக சமூக நலன்புரிச் செய்திகள்

## ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி டிஜிட்டல் கற்றல் முயற்சியின் ஆரம்பம்





ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் தனது ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி டிஜிட்டல் கற்றல் முயற்சியின் முன்னோடித் திட்டத்தை 11 நவம்பர் 2021 அன்று ஆரம்பித்துள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில் பொதுப் பரீட்சைகளுக்குத் தயாராகும் பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த பாடசாலைச் சிறுவர்களின் இணைய வழி கற்றலுக்கு உதவுவதும் அனுசரணையளிப்பதும், இதன் மூலமாக கல்வி வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதில் அதிகரித்துள்ள ஏற்றத்தாழ்வுகளைத் தணிப்பதும் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

முறையே 2021 நவம்பர் 22 மற்றும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதிகளில் கொழும்பு 2 மற்றும் ரணாலவில் உள்ள ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி செயற்திட்ட அமைவிடங்களில் 13 சாதாரண தர மற்றும் 87 உயர் தர மாணவர்கள் என மொத்தம் 100 Samsung A8 tab சாதனங்கள் மற்றும் தரவுத் திட்ட பக்கேஜ்கள் விநியோகிக்கப்பட்டன. டொயிஷ் வங்கி, ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் மற்றும் டயலொக் அக்சிஆட்டா பிஎல்சி ஆகியவை முதற்கட்ட செயற்திட்டத்திற்காக ஜோன் கீல்ஸ் பவுண்டேஷனுடன் இணைந்து செயற்பட்டதுடன், அதேவேளை எலிபன்ட் ஹவுஸ் மற்றும் சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள் ஆகியவை ரணால மற்றும் கொழும்பு 2 நிகழ்வுகளின் ஏற்பாட்டியல் உதவியை வழங்குவதற்கு கைகோர்த்திருந்தன. முறையே அந்தந்த பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள், செயற்திட்ட பங்காளர்களின் பிரதிநிதிகள், பெற்றோர், இதில் பங்குகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் வயடிடநவ சாதனங்களைப் பெற்ற மாணவர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து

## WAVE செயற்திட்டம் (அறிவூட்டலின் மூலமாக வன்முறைக்கு எதிராக உழைத்தல்)








ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை நினைவுகூரும் வகையில், தனது வருடாந்த பிரச்சாரத்தை முன்னெடுக்கும் வகையில் பாலின அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக WAVE செயற்திட்டத்தின் கீழ் அதனை முன்னெடுத்துள்ளது. இந்த ஆண்டு பிரச்சாரம் குடும்ப வன்முறையில் கவனம் செலுத்தியது. தொற்றுநோய் நிலைமையின் போது குடும்ப வன்முறை தொடர்பான புகார்கள் அதிகரித்துள்ள நிலையில், வன்முறை பற்றிய மௌனத்தைக் கலைப்பதற்கு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. விழிப்புணர்வை அதிகரிக்கவும், ஆதரவை ஊக்குவிக்கவும் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கான சவால்கள் மற்றும் தீர்வுகளைப் பற்றி விவாதிக்க ஒரு களத்தை அமைக்கவும் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 25, 2021 அன்று பணிப்பாளர் சபைத் தலைவரால் பணியாளர்களுக்கு விடுத்துள்ள செய்திக்குப் புறம்பாக, பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு உதவி தேவைப்படுகின்ற சமயங்களில் அவர்களுக்கு உதவுவதற்கான அழைப்பு இலக்கங்கள் கிடைக்கப்பெறுகின்றமை தொடர்பான விழிப்புணர்வைத் தோற்றுவிப்பதற்கு சமூக ஊடகங்கள், தொலைக்காட்சி மற்றும் கீல்ஸ் பல்பொருள் அங்காடிகளுடனான ஒரு மூலோபாய கூட்டாண்மை மூலம் ஒரு பொது பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான தேசியக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளரான மானெல் ஜெயமான்ன, பொலிஸ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரேணுகா ஜெயசுந்தர, சட்டத்தரணியும் Women in Need இன் செயற்திட்ட இணைப்பாளருமான நிரோஷிகா ஹெட்டியாராச்சி மற்றும் ஜோன் கீல்ஸ் பவுண்டே'னின் செயல்பாடுகளுக்கான தலைமை அதிகாரியான கார்மலீன் ஜெயசூரிய ஆகியோர் அடங்கிய அணி உறுப்பினர்களுடன் எம்டிவி தொலைக்காட்சி அலைவரிசையுடனான மூலோபாய கூட்டாண்மையுடன் 24 நவம்பர் 2021 அன்று டிவி1 அலைவரிசையில் ஒரு அணி நிலை கலந்துரையாடல் ஒளிபரப்பப்பட்டது. அடிப்படைக் கருத்துகள், அரசு மற்றும் சட்டத் தலையீடுகள், பாதிப்புகள், விளைவுகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைக்கான பரிகாரங்கள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பதிலும், குறைப்பதிலும் கூட்டுப் பங்குதாரர்களின் பங்கேற்பின் முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில் அணி அங்கத்தவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

## கலா பொல நத்தார் நிகழ்வு நிகழ்நிலையாக இடம்பெற்றது!





பெப்ரவரி 2021 இல் கலா பொல நிகழ்நிலை நிகழ்வின் வெற்றியின் காரணமாக, ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் மற்றும் ஜோர்ஜ் கீட் பவுண்டேஷனுடன் இணைந்து, தொற்றுநோய் நிலைமையின் போது இலங்கை கலைஞர்களுக்கு தொடர்ந்து வலுவூட்டுவதற்காக, நத்தார் பண்டிகைக்கு முன்னதாக மீண்டும் ஒருமுறை கலா பொல நிகழ்வினை நிகழ்நிலையாக நடாத்த முடிவு செய்தன. கலா பொல நத்தார் நிகழ்வு 2021 ஆனது 2021 நவம்பர் 28 முதல் டிசம்பர் 12 வரை நிகழ்நிலையாக நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. www.srilankanartgallery.com இல் நிகழ்வு தொடர்பான பிரத்தியேகக் பக்கத்தில் ஜோன் கீல்ஸ் பவுண்டே'னால் நடாத்தப்பட்ட நிகழ்நிலை தளத்தில் 273 கலைஞர்கள் பங்கேற்று 5083 கலைப் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, கலா பொல நத்தார் நிகழ்வுக்கான வங்கிச்சேவைப் பங்காளராகச் செயல்பட்டுள்ளதுடன், FriMi உடனான மூலோபாய கூட்டாண்மை மூலம் பொது விரைவுக் (QR) குறியீடு அடிப்படையிலான கொடுப்பனவு தளத்திற்கு அனுசரணையளிப்பதற்கும் உதவியது.

கலா பொல நத்தார் நிகழ்வில் ஏககாலத்தில் இரு நிகழ்வுகள் இடம்பெற்றன. அதாவது, Shyamala School of Art நிறுவனத்துடன் இணைந்து சிறுவர்களுக்கான நத்தார் செயலமர்வு மற்றும் பாலா பொதுப்பிட்டிய, அனோலி பெரேரா மற்றும் சஞ்சீவி செனவிரத்ன ஆகியோர் அருண் டயஸ் பண்டாரநாயக்கவுடன் இணைந்து இலங்கை கலைஞர்களின் அறிவைப் பகிர்ந்து கொண்டு, நாட்டிற்கு வெளில் தமது படைப்புக்களை கொண்டு செல்ல உதவும் `Spotlight on Artists' தொடர் நிகழ்வு ஆகியன இடம்பெற்றன.

# ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தொழில் வாரம் 2021

ஜோன் கீல்ஸ் குழும தொழில் வாரம் 2021 ஆனது 2021 நவம்பர் 15 முதல் 19 வரை நடைபெற்றது.

உங்கள் இலக்குகளை அடைய ஒருவரின் தொழிலை ஊக்குவிப்பதும் உதவுவதும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஆண்டு சிரேஷ்ட தலைமைத்துவத்துடன் 'ஒற்றைக்கு ஒற்றை உரையாடல்' மூலம் பல செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது #MyMotivationatJKH என்ற கருப்பொருளையொட்டியதாக இடம்பெற்ற ஒரு இன்ஸ்டகிராம் போட்டி, உத்வேகமளிக்கும் ஒரு மேற்கோளுடன் ஒரு திரைப்படம் மற்றும் புத்தகம் தொடர்பான பரிந்துரை, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பற்றிய நமது அறிவைப் புதுப்பிக்க வினா விடைப் போட்டி. எங்கள் நிறுவனத்தில் இருந்து வளர்ச்சி பெற்ற தொழில்முனைவோரை உள்ளடக்கிய ஒரு பட்டியல் மற்றும் கடைசியாக அனைத்திற்கும் மேலாக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் இல் அவர்களை ஊக்குவிக்கும் விஷயங்களைப் பற்றி பேசும் எங்கள் சொந்த சக பணியாளர்கள் மற்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட சிறந்த ஆலோசனைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வீடியோக்களின் தொகுப்பு ஆகியன இவற்றுள் அடங்கியிருந்தன.
















# oneJKH பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு










பெண் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு மற்றும் அறிவூட்டுவதற்கு குழுமத்தின் பெண்களை மையமாகக் கொண்ட கற்றல் முயற்சிகளில் ஒன்றான WOICE இன் 2 ஆவது பதிப்பு 2021 நவம்பர் 4 அன்று நடைபெற்றது. இதில் பங்கேற்றவர்கள் லங்கா மரைன் சேர்வீசஸின் தலைமை நிர்வாக அதிகாரியான அனுஷ்கா வீரரத்னவிடம் நேரடியான அனுபவத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். பெருமளவில் ஆண் ஆதிக்கம் செலுத்தும் தொழில் துறையில் எவ்வாறு தன்னால் தடைகளைத் தாண்டி முன்னேற முடிந்தது என்பதை அவர் பகிர்ந்து கொண்டார். வணிகத்தின் சவாலான மற்றும் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட தன்மையானது பல்வேறு கண்ணோட்டங்களில் சிக்கல்களில் நியாயமான பங்கைக் கொண்டுள்ளது. இருப்பினும், விடாமுயற்சியின் மூலம் இந்த சவால்களை எதிர்கொள்வதன் மூலம், சிறப்பாகச் செயல்படத் தனக்குத்தானே சவால் விடுத்து, சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தி, ஒருபோதும் செயல்திறனில் குறைவடையாது பேணிய திறன் அவரது வெற்றியின் ஏணிப்படிக்கு வழி வகுத்தது. MS Stream வழியாக குழும கற்றல் மற்றும் மேம்பாட்டு ஊடகத்தில் இந்நிகழ்வின் காணொளிப் பதிவு கிடைக்கப்பெறுகிறது.

Hikka Tranz by Cinnamon ஆனது, முதன்முறையாக பெண் பேணல் பராமரிப்பு தொழில்நுட்ப வல்லுனர் மற்றும் இரண்டு நீச்சல் தடாக உதவியாளர்களை பணியில் அமர்த்துவதன் மூலம், பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் அரவணைப்பு உள்ளடக்கத்தை அடைவதற்கான சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகளின் பயணத்தில் மற்றொரு சாதனை இலக்கினை எட்டியுள்ளது.

ஆட்சேர்ப்பு மூலம், ஹிக்கடுவையில் உள்ள Hikka Tranz by Cinnamon, இந்த குறிப்பிடத்தக்க சாதனை இலக்கினை எட்டிய முதல் உல்லாச விடுதி ஹோட்டலாக மாறியுள்ளது. ஏனெனில் இது உல்லாச விடுதிகளின் பணியாளர்களுக்குள் பெண்களை பாரம்பரியமற்ற பதவி நிலைகளில் அறிமுகப்படுத்த உதவியது.







இந்த தொழில்கள் பாரம்பரியமாக அதன் தொடக்கத்திலிருந்தே ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருகின்றது. இருப்பினும், இந்தப் பெண்களை அரவணைத்து உள்ளடக்கிய சூழலை தோற்றுவிக்க Hikka Tranz பல மாற்றங்களை மேற்கொண்டது. மேலும், Hikka Tranz, பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் அரவணைப்பு உள்ளடக்கத்தை அடைவதற்கான குழுமத்தின் இலக்கை ஏற்று, பணியிடத்தில் பெண்களின் விகிதங்களை 15% வரை உயர்த்தியுள்ளது.







சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை நினைவுகூரும் வகையில், Trinco Blu by Cinnamon ஊழியர்களின் உதவியுடன் ஒரு வீடியோ உருவாக்கப்பட்டது. 3 டிசம்பர் 2021 அன்று, ஜோன் கீல்ஸ் குழுமம் எங்கள் அணிகளில் பன்மைத்துவத்தை மதிக்கும் மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் அனைவரையும் அரவணைப்பதை உள்ளடக்கும் கலாச்சாரத்தை தொடர்ந்து வளர்த்து வருகிறது என்ற செய்தியுடன் சமூக ஊடகங்களில் இந்த வீடியோ பகிரப்பட்டது.




CEEBEE's - குழுமத்தின் பிள்ளைப் பராமரிப்புச் சேவை வழங்குநர் மாலபேயில் மற்றுமொரு பராமரிப்பு மையத்தைத் திறந்துள்ளது! மேலும் விவரங்களுக்கு உங்கள் வர்த்தகப் பிரிவின் மனித வளத் தலைமை அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்.

குழும செய்திகள்

## யூனியன் அஷூரன்ஸ்



சிசுமது நாமத்தின் கீழ் யூனியன் அஷூரன்ஸ் நிறுவனம் 15 செப்டெம்பர் 2021 அன்று நாட்டில் உள்ள 397 சிறுவர் மேம்பாட்டு மையங்களுக்கு டெப்லெட் சாதனங்கள் மற்றும் டெஸ்க்டொப் கணினிகளை விநியோகித்துள்ளது.



யூனியன் அஷூரன்ஸ் பிரீமியர் கிளப், இலங்கையின் காப்புறுதித் துறையில் மிகப்பெரிய மற்றும் மிகவும் கவர்ச்சிகரமான வெகுமதித் திட்டமாகும். இது 2021 நவம்பர் 07 ஆம் திகதி கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் சிறந்த சாதனையாளர்களை அங்கீகரித்துள்ளது. உலகத்தரம் வாய்ந்த விற்பனைத் திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவையை வெளிப்படுத்திய நிறுவனத்தின் காப்புறுதி ஆலோசகர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
சிறந்த சாதனையாளர்கள் பலவிதமான வாழ்க்கை முறை மற்றும் வணிக ஊக்குவிப்பு விருதுகளுடன் அங்கீகரிக்கப்பட்டனர். அவர்கள் பெற்ற வரப்பிரசாதங்களில் எரிபொருள் செலவு அடங்கலாக நிறுவனத்தால் பேணிப் பராமரிக்கப்படும் சொகுசு வாகனம் மற்றும் பண வெகுமதிகளும் அடங்கும்.

## ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன்













ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் தனது வருடாந்த பணியாளர் விருது வழங்கும் விழாவை 2021 டிசம்பர் 17 அன்று அரை-நிகழ்நிலை வழிமுறையில் நடத்தியது. விருது வென்றவர்கள் மற்றும் JKOA தலைமைத்துவ அணியினர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டதுடன், ஏனைய அனைவரும் நிகழ்வுகளில் MS Teams தொழில்நுட்ப தளத்தினூடாக இணைந்து கொண்டனர். ஆண்டின் மிகச் சிறந்த பணியாளர், ஆண்டின் மிகச் சிறந்த வெற்றியாளர், சேவைச் சிறப்பு விருதுகள் (2021 ஆம் ஆண்டு வரையில், நிறுவனத்தில் 10 மற்றும் 25 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த ஊழியர்களுக்கான) ஆகிய விருதுகளை வழங்குவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. 'She inspires Award' என்ற விருது பெண் ஊழியர்களை அங்கீகரிக்கும் நோக்கத்துடன் இந்த ஆண்டு விருது வழங்கும் விழாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய மற்றும் சமூக விருது வகையாகும்.

## சினமன் எலைடூ மாலைதீவு







மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை நினைவுகூரும் வகையில், இந்த உல்லாச விடுதி 19 ஒக்டோபர் 2021 அன்று ஒரு சுவரொட்டி பிரச்சாரத்தையும் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அமர்வையும் தொடங்கியது. இது அனைத்து பெண் ஊழியர்களுக்கும் உல்லாச விடுதியின் வைத்தியரால் முன்னெடுக்கப்பட்டது.







சினமன் எலைடூ மாலைதீவு அணியின் “உலக தூய்மைப்படுத்தல் தினம் 2021” இனைக் கொண்டாடும் முயற்சியாக, 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 5 முதல் 11 ஆம் திகதி வரை ஹோட்டலில் டிஜிட்டல் தூய்மைப்படுத்தல் வாரம் 2021 என்ற பிரச்சாரத்தைத் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது.

## ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ்

பண்டிகைக்கால ஷொப்பிங்கிற்கான விரிவான புனரமைப்புக்குப் பிறகு, Crescat Boulevard தனது கதவுகளை 19 நவம்பர் 2021 அன்று மீண்டும் திறந்தது. புதிதாக புனரமைக்கப்பட்ட பேரங்காடியில் நேர்த்தியான, மேம்படுத்தப்பட்ட உட்புற அலங்காரங்கள் மற்றும் புதிய ஷொப்பிங் மற்றும் உணவு விருந்து அனுபவங்கள் நகரின் மையத்தில் நன்கு விரும்பப்படும் மற்றும் நன்கு அறியப்பட்ட அமைவிடத்தில் உள்ளன.





விக்டோரியா கோல்.்.ப் அன்ட் கன்ட்ரி ரிசோர்ட்டில் ஆதனத் தெரிவு விருப்பங்களுக்கு வலுவான தேவை இருப்பதாக ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ் தெரிவித்துள்ளது. நாட்டின் முன்னணி ஆதன நிர்மாணிப்பாளர், அதன் பிரத்தியேக Sunrise Ridge Holiday Homes களில் 50% க்கும் அதிகமானவை நவம்பர் 2021 நிலவரப்படி விற்கப்பட்டுவிட்டதாகவும், செப்டெம்பர் 2020 இல் தொடங்கப்பட்ட முதல் கட்டத்திலிருந்து அனைத்து முதன்மையான காணிகளையும் விற்றுவிட்டதாகவும் அறிவித்துள்ளது.

## மத்திய தொழிற்பாடுகள்

மத்திய மனிதவள அணி றுகுண பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு செயல்பாடுகளில் பங்கேற்றது. 29 ஒக்டோபர் 2021 அன்று, மாணவர்களின் இறுதியாண்டில் நிகழ்நிலையாக மாதிரி நேர்காணல்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு எதிர்காலத்தில் நேர்காணல்களை எதிர்கொள்ளும் போது அவர்களுக்கு உதவும் வகையில் ஆக்கபூர்வமான கருத்துகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.





28 நவம்பர் 2021 அன்று, பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் தொழில் கண்காட்சியான “RuEdCa ‘21” க்கு அமைவாக, “வெற்றிக்கான மாற்று வழிகள்” என்ற தலைப்பில் ஒரு மெய்நிகர் செயலமர்வு நடத்தப்பட்டதுடன், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 80 மாணவர்கள் இதில் பங்கேற்றனர்.

2021 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதியன்று மாணவர்களுக்கான சுயவிபரக் கோவைகளை தயார் படுத்துவதற்கான அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக வழிகாட்டுதல் அமர்வும் நடத்தப்பட்டது.







ஜோன் கீல்ஸ் குழும கற்றல் மற்றும் மேம்பாட்டு அணி நவம்பர் 11 அன்று குழுமத்தின் கற்றல் கலாச்சாரத்திற்கு மதிப்பு சேர்க்கும் வகையில் ‘BRIDGE’, என்ற ஒரு பகிரப்பட்ட கற்றல் முகாமைத்துவக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. பணிப்பாளர் சபைத் தலைவர், கிறிஷான் பாலேந்திரா அவர்கள், நிகழ்நிலைக் கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுடன் கற்றல் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை வலியுறுத்தும் வகையில், குழுமவாரியாக கற்பவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

## சினமன் ஹிக்கா டிரான்ஸ்

கொவிட் இடைத்தங்கல் முகாம் நடவடிக்கைகளில் பணியாற்றிய ஹிக்கா டிரான்ஸின் ஊழியர்கள் கொவிட்-19 நெருக்கடியின் போது அவர்களின் தலைசிறந்த பங்களிப்புகள் மற்றும் முயற்சிகளுக்காகவும், அவர்களின் பூரண ஒத்துழைப்பை வழங்கியதற்காகவும் 1 அக்டோபர் 2021 அன்று நடைபெற்ற வைபவத்தில் அங்கீகரிக்கப்பட்டனர்.

தொற்றுநோயை சமாளிக்க முடியாமல் போன காலகட்டத்தில் தேசிய சுகாதார சேவைகளுக்கு உதவும் சவாலை ஹிக்கா டிரான்ஸ் ஏற்றுக்கொண்டது. ஆசிரி மருத்துவமனையின் மருத்துவ சேவை கூட்டாளருடன் உடன்படிக்கையை ஏற்படுத்தி, ஏழு நாட்களுக்குள், ஹோட்டல் கட்டுமான தளத்தில் இருந்து 140 அறைகள் கொண்ட கொவிட் இடைத்தங்கல் முகாமாக மாற்றப்பட்டது.







## கீல்ஸ்

சில்லறை வர்த்தகத் துறையில் டிஜிட்டல் அறிவுச் சூழல் கட்டமைப்பை உருவாக்கும் அதே வேளையில், விநோதமான கற்றல் கலாச்சாரத்துடன் கேம் அம்சத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன், டிசம்பர் 1, 2021 அன்று BMICH இன் Mihilaka Madura மண்டபத்தில் “Genext' 21” என்ற கொத்தணிக்கு இடையிலான அறிவுச் சுற்றுப்போட்டியை கீல்ஸ் ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வின் சிறப்பு என்னவென்றால், இந்த அறிவுப் போட்டியின் ஆரம்ப சுற்றுகள் KRA இணைய தளம் வழியாக நடத்தப்பட்டமையாகும்.









6.7.4 டிசம்பர் 16, 2021 அன்று கீல்ஸ் விருதுகள் நிகழ்வு இடம்பெற்றது.






குழும செய்திகள்

## ஒக்டேவ்




ஜோன் கீல்ஸ் குழும தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுத்திறன் மையமான ஒக்டேவ், 22 நவம்பர் 2021 முதல் 10 டிசம்பர் 2021 வரை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி கற்கைபீடம் ஏற்பாடு செய்த முழுமையான மெய்நிகர் தொழில் கண்காட்சியில் பங்கேற்றது. பட்டதாரிகளுக்கு ஒக்டேவ் இற்கு அர்ப்பணிக்கப்பட்ட கூடம் மற்றும் கிடைக்கக்கூடிய தொழில் நிலைகளைப் பற்றிய தகவலைப் பெறவும் மற்றும் ஒக்டேவ் அணியில் சேருவதற்கான சாத்தியக்கூறுகளுடன் அதற்கு விண்ணப்பிக்கவும் கூடத்திற்கு 'வருகை' தருவதற்கு வாய்ப்பு கிடைத்தது..

## டீ ஸ்மோல்ஹோல்டர் ஃபெக்டரீஸ்

காலியில் ஜோன் கீல்ஸ் ஆங்கில மொழிப் புலமைப்பரிசில் திட்டத்தின் அங்குரார்ப்பணம் 2021 டிசம்பர் 04 ஆம் திகதி, டீ ஸ்மோல்ஹோல்டர் ஃபெக்டரீஸ் தொழிற்சாலை அத்தியட்சகர்கள் மற்றும் கேட்வே சர்வதேச பாடசாலையின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் தவளம அசோகாராம விகாரையில் இடம்பெற்றது.





100 நாட்கள் மகப்பேறு விடுமுறையில் இருந்த கராவிட்ட தேயிலை தொழிற்சாலையின் தலைமை எழுதுவினைஞர் தனது கடமைகளை தவறாது நிறைவேற்றியதற்காக, புதிய பனாவென்ன தேயிலை தொழிற்சாலையின் தலைமை எழுதுவினைஞருக்கு அவரது அர்ப்பணிப்பினைப் போற்றும் வகையில் 1 டிசம்பர் 2021 அன்று BRAVO விருது வழங்கப்பட்டது.



## ஜோன் கீல்ஸ் ஐடி



ஜோன் கீல்ஸ் ஐடி தனது SAP பயன்பாட்டின் செயல்திறன், சுறுசுறுப்பு மற்றும் நிலைபேற்றினை மேம்படுத்தும் நோக்கத்துடன் Rockland Distilleries (Pvt) Ltd நிறுவனத்தில் உள்ள MS Azure மேகக்கணினிக்கு தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மாற்றுவதற்கான திட்டத்தை நவம்பர் 15, 2021 அன்று வெற்றிகரமாக நிறைவு செய்தது. ஜோன் கீல்ஸ் ஐடி அணி SAP இன் முக்கியமான பணிச்சுமைகளை உன்னிப்பாக மதிப்பிட்டு, Rockland Distilleries (Pvt) Ltd நிறுவனத்துக்கான பேரிடர் மீட்பு (Disaster Recovery) தீர்வுடன் தற்போதுள்ள வளாகத்தில் உள்ள தரவு மையத்தை மாற்றியுள்ளதுடன் மற்றும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பில் மாற்றப்பட்ட Azure செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மைக்ரோசொ∴ப்ட் Azure மேகக்கணினி நிறுவனத்திற்கு வழங்கும் பல நன்மைகளுடன் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

தலைமுறை தலைமுறையாக இலங்கை மக்களின் அங்கீகாரத்தையும், அபிமானத்தையும் வென்றெடுத்து, தலைசிறந்த காதிதாதி மற்றும் பாடசாலை தேவைப்பாடுகளுக்கான உற்பத்திகளில் சந்தை முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்ற அட்லஸ், கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பினை ஈடு செய்ய அதன் செயல்பாட்டு திறனை உடனடியாக விரிவாக்க விரும்பியது. ஜோன் கீல்ஸ் ஐடி அட்லஸின் டிஜிட்டல் வளர்ச்சி மாற்றத்திற்கான கூட்டாளராக Azure க்கு முழுமையான கட்டமைப்பு மேகக்கணினி மாற்றத்தை முன்னெடுத்துள்ளது. இந்த செயற்திட்டம் 10 ஒக்டோபர் 2021 அன்று நிறைவடைந்தது. Azure இல் உள்ள விஸ்தரிப்புத்திறனுக்கான உள்கட்டமைப்பு மூலம், அட்லஸ் கேள்வி அதிகரிப்புக்களை ஈடு செய்வதில் அதன் செயல்பாட்டு திறனை எளிதாக மேம்படுத்த முடியும்.



## சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ்










"The Voice of CF" என்பது நுகர்வோர் உணவுத் துறையில் உள்ள அனைத்து பதவி நிலை ஊழியர்களுக்கும் அவர்களின் பாடல் திறமைகளை ஊக்குவிப்பதற்கும் அவர்களின் சிறப்பான திறமை மூலம் இத்துறையின் மத்தியில் போட்டியிடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்வின் முதல் சுற்றில் ஒரு தொழில்முறை நடுவர் அணியால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் 11 இடங்களைப் பிடித்த போட்டியாளர்கள், ஒரு விரிவான குரல் பயிற்சி மற்றும் ஒலிப்பதிவகத்தின் செயல்பாட்டின் பின்னணியில் உள்ள உற்சாகத்தைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர். மாபெரும் இறுதிப் போட்டி 17 நவம்பர் 2021 அன்று பிரமாண்டமாக நிறைவடைந்ததுடன், மேலும் திறமையான வெற்றியாளர், 2 ஆவது இடம், 3 ஆவது இடம் மற்றும் மிகவும் பிரபலமான பாடகர் ஆகியோருக்கு மதிப்புமிக்க பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதிப் போட்டி முகநூல் நேரலை நிகழ்ச்சி மூலம் ஒளிபரப்பப்பட்டது.

## வோக்கர்ஸ் டுவர்ஸ் அன்ட் விட்டல்ஸ் டிராவல்ஸ்

வோக்கர்ஸ் டுவர்ஸ் அன்ட் விட்டல்ஸ் டிராவல்ஸ் இலங்கையின் மிகப்பெரிய தன்னார்வப் பிரச்சாரமான 'Nurdle Free Lanka' உடன் இணைந்துள்ளது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பேரழிவின் குப்பைகளை எங்களின் கடற்கரையோரங்களில் இருந்து சுத்தம் செய்வதற்காக Pearl Protectors ஒரு தன்னார்வ கூட்டாளராக இதனை ஆரம்பித்திருந்தது. 12 தன்னார்வ அணிதிரட்டல்கள் மூலம், 60 மில்லியன் பிளாஸ்டிக் துகள்களைக் கொண்ட 1122 கிலோ எடையுள்ள பிளாஸ்திக் மணிகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட பிளாஸ்திக் மணிகள் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், ஏனைய பிளாஸ்திக் மற்றும் கண்ணாடி கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு, அவற்றை மீள்சுழற்சி கூட்டாளர்களான Eco spindles, Zero Trash போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைத்து பொறுப்புணர்வுடன் அகற்றப்பட்டன. உலக தன்னார்வலர்கள் தினத்தையொட்டியதாக 2021 டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற தன்னார்வ விருது வழங்கும் விழாவில், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸின் உள்வரும் சுற்றுலாத்துறைப் பிரிவு இதற்கான பிரச்சாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக அங்கீகரிக்கப்பட்டது.








## ஜோன் கீல்ஸ் லொஜிஸ்டிக்ஸ்



ஜோன் கீல்ஸ் லொஜிஸ்டிக்ஸ், 2021 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் திகதி ரத்தொலுகமவில் அமைக்கப்படவுள்ள அதிநவீன களஞ்சியசாலையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளது, இது பிராந்தியத்தின் வளர்ந்து வரும் வழங்கல் சங்கிலி தேவைகளை எளிதாக்கும் வகையில் இலங்கையின் ஏற்பாட்டியல் வழித்தடத்தில் மூலோபாய ரீதியான இடத்தில் அமைக்கப்படும். களஞ்சியசாலை வசதி 100,000 சதுர அடி மொத்த பரப்பளவைக் கொண்டிருப்பதுடன், மற்றும் 18,000 கன மீட்டர் களஞ்சியப்படுத்தல் திறனைக் கொண்டிருக்கும்.

## ஜோன் கீல்ஸ் எக்ஸ்




ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆரம்ப வர்த்தக முயற்சி விரைவுபடுத்தல் மற்றும் பகிரங்க புத்தாக்க நிகழ்ச்சித்திட்டமான ஜோன் கீல்ஸ் எக்ஸ், அதன் சமீபத்திய வடிவமான JKX 4.0 ஐ டிசம்பர் 1 ஆம் திகதி அறிமுகப்படுத்தியது. ஆரம்பநிலை தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வர்த்தக முயற்சிகளை ஈர்க்கவும், ஆதரவளிக்கவும், பயன்பாட்டுக்கு ஏற்ற வணிகச் சவால்களைத் தீர்க்கவும், முதிர்ச்சியடைந்த வர்த்தக முயற்சிகளை மேலும் வளர்க்கவும் இது தனித்துவமான வகையில் தயாராக உள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்ப நிதியுதவி, வழிகாட்டுதல், பயிற்சி, அலுவலக இடம் மற்றும் ஏனைய வளங்களை ஆரம்ப வர்த்தக முயற்சிகள் மற்றும் வர்த்தக விரிவாக்க முயற்சிகள் தங்கள் தொடக்க பயணத்தின் ஆரம்ப கட்டங்களில் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை வழிநடத்திச் செல்ல உதவுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப வர்த்தக முயற்சிகள், ஜோன் கீல்ஸ் குழுமத்தில் உள்ள வணிகங்களுக்கும் மற்றும் அவற்றின் தலைமைத்துவத்திற்கும் ஈடுஇணையற்ற அணுகல் வசதியைக் கொண்டுள்ளன. இதன் மூலமாக தொழில் நிபுணத்துவம் மற்றும் அறிவைப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் கிடைக்கக்கூடிய புத்தாக்கமான சூழல் கட்டமைப்பை பரந்த அடிப்படையிலான நிறுவனங்களுடனான மூலோபாய கூட்டாண்மைகளுடனும் ஜோன் கீல்ஸ் எக்ஸ் இணைத்துள்ளது.

ஜோன் கீல்ஸ் குழுமத்துடன் ஈடுபடுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் ஆரம்ப வர்த்தக முயற்சிகளுக்கு துரிதப்படுத்துதல், புத்தாக்கப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய மூன்று தனித்துவமான அம்சங்களின் கீழ் இந்த ஆண்டுக்கான திட்டம் 1 டிசம்பர் 2021 அன்று தொடங்கப்பட்டது.

## ஜோன் கீல்ஸ் பிஎல்சி





ஜோன் கீல்ஸ் பிஎல்சி 2021 டிசம்பர் 21 அன்று திரு. துரான் டி அல்விஸ் அவர்களை 2020/2021 இற்கான வருடத்தின் மிகச் சிறந்த ஊழியராகவும், திரு. சுஜீவ தெஹிகஸ்பிட்டிய அவர்களை வருடத்தின் வெற்றியாளராகவும் தெரிவு செய்து பாராட்டியுள்ளது.

ஜோன் கீல்ஸ் பிஎல்சி திரு அஜித் நாரங்கொட்டுவ அவர்கள் நிறுவனத்திற்கு 25 வருடங்களாக விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் சேவை செய்ததற்காக 25 ஒக்டோபர் 2021 அன்று அவரைப் பாராட்டியுள்ளது.

விளையாட்டுக்கள், கழகங்கள் மற்றும் சங்கங்கள்

## ஒலிவாங்கிக்குப் பின்னால்

17 நவம்பர் 2021 அன்று மாலை 4.30 மணி முதல் MS Teams தளத்தின் மூலம் Blue Mango Partners இல் நிறுவன தொடர்பாடல் நிபுணரும், பயிற்றுவிப்பாளருமான அஷின்சானி வீரசிங்கவுடன் ஒலிவாங்கிக்குப் பின்னால் என்ற தலைப்பிலான இரண்டாவது அமர்வை கழகம் ஏற்பாடு செய்தது. இந்த அமர்வை இன்.'.போமேட் நிறுவனத்தின் கற்றல் மற்றும் மேம்பாட்டுத் துறை உதவி முகாமையாளரான கிளைட் ரொட்றிகோ அவர்கள் நெறிப்படுத்தினார்.





## ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பேச்சு வன்மைக் கழக நத்தார் விருந்து






டிசம்பர் 16, 2021 அன்று மாலை 5.00 மணி முதல் ஜோன் கீல்ஸ் குழுமத்தைச் சேர்ந்த அதன் உறுப்பினர்களுக்கும், ஏனையவர்களுக்கும் நத்தார் விருந்தை கழகம் நடத்தியது. அது நத்தார் பரிசுப் பொருட்கள், நத்தார் கீதங்கள் மற்றும் உற்சாகம் நிறைந்த மாலைப் பொழுதாக அமைந்தது.




**ஜேகே டைம்ஸ் 2 ஆவது காலாண்டு வினாவிடைப் போட்டியின் வெற்றியாளர்**



**தனுஷி ரொட்றிகோ**

**5 வினாக்களுக்கும் சரியாக பதிலளித்து அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்!**

ஜேகே டைம்ஸ் சமீபத்தைய வெளியீட்டின் அடிப்படையில் மிக இலகுவான 5 வினாக்களுக்கு சரியாக பதிலளிப்பது மட்டுமே நீங்கள் செய்ய வேண்டியது! உங்களுடைய பெயர், வர்த்தகப் பிரிவு மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றுடன் உங்களுடைய பதில்களை 2022 பெப்ரவரி 17 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் isuri.jkh@keells.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

1. ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி டிஜிட்டல் கற்றல் முன்னெடுப்பின் முன்னோடிச் செயற்திட்டத்தின் கீழ் டெப் சாதனங்கள் மற்றும் தரவுத் திட்டப் பொதிகள் எந்த 2 இடங்களிலுள்ள மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன?
2. இந்த ஆண்டு பணிப்பாளர் சபைத் தலைவரின் விருதுகள் நிகழ்வில் புதிதாக வழங்கப்பட்ட விருதுப் பிரிவின் பெயர் என்ன?
3. இந்த ஆண்டு ஜோன் கீல்ஸ் குழும தொழில் வாரத்தில் இடம்பெற்ற இன்ஸ்டகிராம் போட்டியின் தொனிப்பொருள் என்ன?
4. கீல்ஸ் ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட கொத்தணிகளுக்கிடையிலான அறிவுப் போட்டியின் பெயர் என்ன?
5. ஜோன் கீல்ஸ் எக்ஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் 3 தனித்துவமான பிரிவு அம்சங்கள் எவை?

இந்த செய்திமடல் ஜோன் கீல்ஸ் குழும நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் விபர பகிர்வு நோக்கங்களுக்காக செய்யப்படுகின்றது.

**இசுரி அபேவிக்ரம**
நிர்வாகி - நிறுவன தொடர்பாடல்கள் பிரிவு

117 சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02
தொ.பே: +94 (0) 11 230 6191
மின்னஞ்சல்: jkh@keells.com
இணையத்தளம்: www.keells.com